# BALAVACHAKAM

## THIRD BOOK

TAMIL

VIDWAN

R. MEENAKSHISUNDARAM

*Lcturer in Tamil, St. Joseph's School, Trichinopoly*

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE

(*Vide Gazette dated, 10th May 1938, page 194*)

MADRAS

C. COOMARASAWMY NAIDU & SONS

1938

Registered] [Price $3\frac{1}{2}$ As.

671

# பால வாசகம்

## மூன்றாம் வகுப்பு

திருச்சிராப்பள்ளி செய்ன்ட் ஜோஸப்
கலாசாலைத் தமிழாசிரியர்
**வித்துவான் - R. மீனாட்சிசுந்தரம்**
எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது
[10-5-'38 கெஜட் 194-ஆம் பக்கம் பார்க்க]
(*Reprinted in 1938*)

சென்னை :
**ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்**
**1938**


ரெஜிஸ்தர் செய்தது]     [விலை 3½ அணா

Printed at
The 'Caxton Press,'
Madras.

# பொருள் அடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | தாய் தந்தையர் | 5 |
| 2. | நரியும் பூனையும் | 7 |
| 3. | நல்ல பையன் | 9 |
| 4. | திருடன் | 10 |
| 5. | பையனும் பருந்தும் | 12 |
| 6. | வியாபாரி | 15 |
| 7. | குரங்கு | 17 |
| 8. | முயற்சி | 19 |
| 9. | மூன்று மருந்துகள் | 20 |
| 10. | உபாத்தியாயர் | 23 |
| 11. | தண்ணீர் | 25 |
| 12. | புலவர் வறுமை | 27 |
| 13. | ஜீவகாருண்யம் | 29 |
| 14. | கழுகும் பூனையும் | 32 |
| 15. | நித்திரை | 34 |
| 16. | மழை | 36 |
| 17. | ஈக்களும் கொசுக்களும் | 38 |
| 18. | குருபக்தி | 40 |

| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 19. | கம்பர் - - - - - | - 42 |
| 20. | கிருஷ்ணன் - - - - | - 44 |
| 21. | தேகப்பயிற்சி - - - | - 47 |
| 22. | மங்கம்மாள் - - - - | - 50 |
| 23. | கடிதம் - - - - | - 52 |
| 24. | சுகாதார வாக்கியங்கள் - - | - 53 |
| 25. | உலோகங்கள் - - - | - 54 |
| 26. | மரம் - - - - - | - 56 |
| 27. | தந்திரமுள்ள ஆமை - - | - 58 |
| 28. | **ஔவை அருந்தமிழ்** - - - | - 61 |
| 29. | ஒற்றுமை - - - | - 62 |
| 30. | இரண்டு வழிப்போக்கர்களும் கரடியும் - | - 65 |
| 31. | யானை - - - - | - 68 |
| 32. | கிராம பரிபாலனம் - - - | - 71 |
| 33. | நமது இந்தியாவின் சக்கரவர்த்தியாகிய ஐந்தாம் ஜார்ஜ் மகாராஜர் - - | - 74 |
| 34. | செய்யுள் பாடம் - - - | - 75 |
| — | **கொன்றை வேந்தன்** - - - | - ,, |



# பால வாசகம்

## மூன்றாம் வகுப்பு

---

### I. தாய் தந்தையர்

பிள்ளைகளே! உங்களை அதிகமாக நேசிக்கிறவர்கள் யார்? உங்களுடைய தாயும் தந்தையும் அல்லவா? கண்ணை இமை காப்பதுபோல, அவர்கள் உங்களை எப்பொழுதும் பாதுகாக்கின்றனர். உங்களுக்கு எப்பொழுதும் நன்மையை விரும்புவார்கள். நீங்கள் நீண்ட காலம் உயிரோடிருக்கக் கடவுளை உங்கள் தாயும் தந்தையும் வேண்டுகின்றனர்.

உங்களுக்குச் சிறிது வருத்தம் நேரிட்டாலும் அவர்கள் பொறுக்கமாட்டார்கள். உங்களுக்கு ஈ, எறும்புகள் முதலியவற்றாலும் துன்பம் உண்டாகாதபடி பாதுகாப்பார்கள். அவர்கள் படுங் கஷ்டத்திற்கு அளவில்லை. தாயார் உங்களைப் பத்து மாதம் வயிற்றில் சுமந்து பெற்றாள். நீங்கள் சிறு குழந்தையாய் இருந்தபோது உங்கள் உடலைப் பாதுகாத்தாள். தான் தூங்காமல் உங்களைத் தூங்க வைத்தாள்.

அவள் உங்களுக்கு உணவூட்டினுள். நடக்கக் கற்பித்தாள். நீங்கள் நோயுற்றபோது உங்கள் தாய் மருந்துண்டாள்.

தகப்பனுர் உங்களை வளர்க்கப் பொருள் தேடுகின்ருர். பணம் இல்லாவிடில் உணவு கிடைக்காது; உடுக்க உடை யில்லை; இருக்க இடமில்லை; புத்தகம் வாங்க முடியாது. பணம் சம்பாதிக்கப் பயிர்த் தொழில் செய்யவேண்டும்; வியாபாரம் செய்யவேண்டும்; அல்லது வேறு தொழில் செய்யவேண்டும். பாவம் தகப்பனுருக்கு எவ்வளவு கஷ்டம்!

உங்கள் நன்மைக்காகத் தாய் தந்தையர் எவ்வளவு கஷ்டப்படுகின்ருர்கள். அப்படிப் பட்டவர்கள் இடத்தில் நீங்கள் எவ்வளவு அன்பா யிருக்கவேண்டும்!

அவர்கள் சொன்னபடி நடக்கவேண்டும். எப்போதும் அவர்கள் சொல்லை மீறி நடக்கலாகாது. பெற்ருேர்கள் மகிழும் காரியத்தையே செய்யவேண்டும். அவர்கள் மனம் வருந்த நடக்கலாகாது. அவர்கள் வயது சென்ற காலத்தில் அவர்களுக்கு உதவியாய் இருக்க வேண்டும். அவர்களைச் சுகமாக வைத்துப் பாதுகாக்க வேண்டும்.

**"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"**

# 2. நரியும் பூனையும்

ஒரு நாள் ஒரு நரியும் பூனையும் பிரியத்தோடு பேசிக்கொண் டிருந்தன. நரி பூனையைப் பார்த்து, "மாமா! நல்ல குணங்கள் எல்லாவற்றிலும் ஜீவகாருண்யம் சிறந்தது. எத்தனை நல்ல குணங்கள் இருந்தாலும் கருணை இல்லாவிடில் ஒருவனும் நற்கதி அடையமாட்டான்" என்றது.

அதற்குப் பூனை, "தாங்கள் சொன்னது உண்மையே. கருணை இல்லாதவனுடைய பிழைப்புப் பயனற்றது" என்றது.


அச்சமயத்தில் அவைகளுக் கருகில் ஒரு ஓநாய் ஆட்டுக்குட்டி யொன்றைப் பிடித்துத் தின்றுகொண்டு இருந்தது.

அதைப் பார்த்த நரி, "ஐயோ! பிராணிகளைத் துன்புறுத்தி வயிறு வளர்க்கலாமா? பாவமல்லவா?" என்றது.

அதைக்கேட்ட பூனை, "உயிர்களை வதைத்தல் கூடாது. இந்தப் பாழும் வயிறு இலைதழைகளைத் தின்றால் நிரம்பாதா?" என்றது.

இவ்வாறு இரண்டும் பேசிக்கொண்டிருக்கும்போது பக்கத்திலிருந்த குடிசையிலிருந்து ஒரு சேவலும் எலியும் வெளியில் வந்தன.

உடனே நரி சேவலின்மேல் பாய்ந்து கடித்துத் தின்றது. பூனை எலியின்மேல் பாய்ந்து கொன்று தின்றது.



இந்தப் பூனையும் நரியும்போலவே சில மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களும் தங்களுக்கு ஒரு காரியம் கைக்குக் கிட்டும் வரையில் இவ்வாறு வேதாந்தம் பேசிக்கொண்டிருப்பார்கள். சமயம் கிடைத்தால் தங்கள் தங்கள் காரியத்தைக் கைவிட மாட்டார்கள். ஆதலால் அவர்கள் பேசும் வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கலாகாது.

"வஞ்சகர் மொழிகளைக் கொஞ்சமும் நம்பேல்"

# 3. நல்ல பையன்

ஒரு கிராமத்தில் பொன்னன் என்னும் ஒரு சிறுவன் இருந்தான். அவன் நல்ல பிள்ளை. தனது தாய் தந்தையரிடத்தில் பணி வாய் நடப்பான். அவர்களது வார்த்தைகளைக் கேட்டுக் கீழ்ப்படிந்து நடப்பான். ஆதலால் அவனை எல்லோரும் "பொன்னு, பொன்னு" என்று அழைப்பார்கள்.

அவன் ஒரு நாள் தன் அன்னையைப் பார்த்து, "அம்மா! நான் குருவின் காரியமாக அடுத்த கிராமத்துக்குப் போகவேண்டும்; உத் தரவு கொடு" என்ருன். அவள், "குழந்தாய்! தனியாகப் போகாதே, துணையோடு அல்லது நெடுவழி போகேல்" என்ருள். அவன் "அம்மா! வழியில் பயமில்லை, நீ அஞ்சாதிரு" என்ருன். அவள், "அப்பா! எப்படி இருந் தாலும் நீ தனித்துச் செல்லாதே" என்று ஒரு கலயத்தில் நண்டு ஒன்றைப் பிடித்துப் போட்டுக் கொடுத்துக் "கொண்டுபோ" என் ருள். அவனும் தாய் மொழியைத் தலைமேற் கொண்டு சென்ருன். வழியில் வெயிலால் களைத்து ஒரு மரத்தின் நிழலில் படுத்து உறங்கி விட்டான். அப்போது ஒரு பாம்பு அங்கு வந்து கலயத்தில் தலை இட்டது. அதைக்

கண்ட நண்டு, அதைக் கொடுக்கால் இடுக்கிக் கொன்றது.

பின் அச்சிறுவன் விழித்து, நடந்ததைக் கண்டு, "ஆ! ஆ! மூத்தோர் சொல்லும் வார்த்தை அமுதம் என்பதன் உண்மையை இப்போதுதான் நான் கண்டறிந்தேன். இனி ஒருபோதும் தாய் சொல் துறவேன்" என்று உறுதி செய்துகொண்டு வழி நடந்தான். அவன் சென்ற காரியத்தை முடித்துக்கொண்டு தன் வீடு சென்று நடந்ததைத் தாயிடம் சொல்லி அவளை வணங்கி இன்புற்றிருந்தான்.

**"மூத்தோர் சொல் வார்த்தை அமுதம்"**


## 4. திருடன்

ஒரு நாள் பொழுது போகும் சமயமாய் இருந்தது. அப்பொழுது ஒரு திருடன் ஒரு செட்டியின் வீட்டுக்குள் புகுந்து பரணியில் ஏறி ஒளிந்துகொண்டான். அவ் வீட்டுக்காரன் இரவில் சாப்பிட்ட பிறகு உறங்கப் போவதற்கு முன்னே திருடனைக் கண்டு கொண்டான்.

அந்தச் செட்டி மிகுந்த தந்திரசாலி. திருடன் என்றால், பக்கத்து வீட்டார் வருவதற்கு

முன்னே அவன் ஓடிப்போவான் என்று, ஒரு தந்திரம் செய்தான்.

அவன் தன் மனையாளைக் கூப்பிட்டு, "ஊரில் திருடர்கள் அதிகமா யிருக்கிறார்கள்.



ஆதலால் எல்லா நகைகளையும் கொண்டுவா" என்றான். அவளும் நகைகளை எல்லாம் கொண்டுவந்து கொடுத்தாள். செட்டி அவை

களை வாங்கி ஒரு பெட்டியில் வைத்தான். வைக்கும்போது "ஐயோ! தேள் கொட்டிவிட்டது! தேள் கொட்டிவிட்டது!" என்று கூக்குரலிட்டான். அதைக் கேட்டதும் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் யாவரும் வந்து மருந்து இட்டார்கள்.

சிலர் மருந்து இட்டபின் "விஷம் இறங்கி விட்டதா?" என்று கேட்டார்கள். அப்போது, செட்டி, "விஷம் இறங்கி விட்டது; அந்தப் பரணியில் உள்ள திருடன் மாத்திரம் இறங்கவில்லை" என்றான்.

உடனே யாவரும் சேர்ந்து அந்தத் திருடனைப் பிடித்துக் கை கால்களைக் கட்டித் தலையாரி இடத்தில் ஒப்புவித்தார்கள். பின்பு அத் திருடனை விசாரித்துத் தண்டித்தார்கள்.

"புத்திமானே பலவானவான்"

## 5. பையனும் பருந்தும்

ஒரு கிராமத்தில் பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் காசி யாத்திரை செய்ய விரும்பினான். அவனிடத்தில் பல நாளாகச் சேர்த்து வைக்கப்பட்ட தங்கம் சிறிது இருந்தது. அந்தத் தங்கத்தைத் தனது நேசனான வர்த்தகனிடத்தில் கொடுத்து வைத்து யாத்திரை சென்றான்.

வர்த்தகன் பொன்னைச் சும்மா வைத்திருப்பானா? அவன் அந்தத் தங்கத்தைப் பணமாக மாற்றி வர்த்தகத்தைப் பெருக்கினான். வியாபாரமும் மிகுதியாக நடந்துவந்தது.

சில ஆண்டு கழிந்தபின் யாத்திரை சென்ற பிராமணன் திரும்பி வந்தான். அவன் வர்த்தகனைக் கண்டு தான் கொடுத்து வைத்திருந்த பொன்னைக் கேட்டான்.

அந்தச் செட்டி, "ஐயா! நீங்கள் கொடுத்த பொன்னை ஒரு அறையில் வைத்துப் பத்திரமாகப் பூட்டி வைத்திருந்தேன். சில நாட்களுக்குமுன் அந்த அறையைத் திறந்து பார்த்தேன். எங்கும் எலி வளையாய் இருந்தது. பொன்னைக் காணவில்லை. அந்த எலிகளெல்லாம் அவ்வளவு பொன்னையும் தின்றுவிட்டன" என்றான்.

இதைக்கேட்ட அப்பிராமணனுக்கு எவ்வளவு கோபமுண்டாயிருக்கும்? அவன் எவ்வளவு வருத்தமுற்றிருப்பான்? இருந்தாலும் அவன் தனது வருத்தத்தை வெளியில் காட்டவில்லை; முன்போலவே வர்த்தகனை நேசித்து வந்தான்.

ஒருநாள் அந்தப் பிராமணன் ஆற்றுக்குச் சென்றுகொண்டிருந்தான். அப்போது செட்டியின் மகனும் அவன் பின்னே போனான். அவனைக் கண்ட பிராமணன் அவனுக்குச் சிறிது

தின்பண்டம் வாங்கிக்கொடுத்து அவனைக் கூட்டிச் சென்று ஓரிடத்தில் ஒளித்து வைத்தான்.

பிராமணன் விசனத்துடன் செட்டியிடம் போய் "ஐயா! உமது பையனைப் பருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டது" என்றான்.

அதைக் கேட்ட வர்த்தகன் அப்பிராமணன் நகைக்கு ஆசைப்பட்டுப் பிள்ளையைக் கொலை செய்திருப்பான் என்று எண்ணினான். உடனே அவன் சென்று நியாயாதிபதியிடம் முறையிட்டுக்கொண்டான்.

அந்த நியாயாதிபதி பிராமணனைக் கூப்பிட்டு, "அந்தப் பையனை என்ன செய்தாய்?" என்றான்.

பிராமணன், "ஐயா! நான் ஆற்றுக்குப் போய்க்கொண் டிருந்தேன். அவனும் வந்தான். திடீரென்று ஒரு பருந்து வந்து அவனை எடுத்துச் சென்றது" என்றான்.

நியாயாதிபதி, "உண்மையை உரை. பிள்ளையைப் பருந்து தூக்கிச் செல்லுமா? அப்பிள்ளையை எங்கு புதைத்து வைத்திருக்கின்றாய்?" என்று தொந்தரவு செய்தான்.

அதற்குப் பிராமணன், "ஐயா! பொற்கட்டியை எலி விழுங்குமானால் பருந்து பிள்ளையை எடுத்துச் செல்லாதா?" என்றான்.

அதைக் கேட்ட நீதிபதி சமாசாரத்தை நன்ருக விசாரித்து பிராமணனுக்குப் பொன்ஜனக் கொடுக்கும்படி செட்டிக்கு உத்தரவு கொடுத்தான். செட்டிக்குப் பிள்ளையைக் கொடுக்கும்படி பிராமணனுக்கு உத்தரவு கொடுத்தான்.

"மோசம் முன்னுக்கு வராது"

## 6. வியாபாரி

ஓர் ஊரில் ஒரு மகமதியன் இருந்தான். அவன் வியாபாரம் செய்து மிகுந்த பணத்தைச் சேர்த்தான். அவன் வீடெங்கும் பணமே நிறைந்திருந்தது. இலக்குமி அவனது வீட்டில் பிரகாசித்துக்கொண்டு இருந்தாள்.

ஒரு நாள் இரவில் சில திருடர்கள் அவன் வீட்டில் நுழைந்தார்கள். தெய்வ வசத்தால் தூங்கிக்கொண் டிருந்த வியாபாரி விழித்துக் கொண்டான். வியாபாரி மெதுவாக எழுந்து ஒரு திருடனைப் பிடித்துக்கொண்டான். அந்தத் திருடன் எப்படியோ தப்பி ஓடிவிட்டான்.

அம் மகமதியன் அத் திருடனைக் குறிப்பாகத் தெரிந்துகொண்டு, நீதிபதியிடம் போய் முறையிட்டான். நீதிபதியும் அத்

திருடனைக் கொண்டுவரச் செய்து விசாரித்தான். அத் திருடன் வியாபாரியினது வீடே தனக்குத் தெரியாதென்றான்.

உடனே நீதிபதி அம் மகமதியனைக் கூப்பிட்டு "சாட்சிகள் உண்டா?" என்றான். மகமதியன், "நடு இரவில் திருடன் வந்தான். அப்போது சாட்சிகள் யார் இருப்பார்கள்? சாட்சிகள் இல்லை" என்றான்.

நீதிபதி "சாட்சி யில்லாத வழக்கை விசாரிக்க மாட்டேன்" என்று, வியாபாரி கொடுத்த வழக்கைத் தள்ளிவிட்டான்.

அச் சமயத்தில் மகமதியன் திருடனை அடித்தான். அதைக் கண்ட நீதிபதி "ஏன் அவனை அடித்தாய்?" என்றான்.

மகமதியன், "இந்தத் திருடன் திருட வரும்போது முன்னதாகவே எனக்குத் தெரிவிக்கக் கூடாதா? எனக்குத் தெரிந்திருந்தால் நான் சாட்சிகளைத் தயாராக வைத்திருப்பேன். அப்படிச் செய்யாமல் எனது வழக்கைக் கெடுத்துவிட்டான். இவனை என்ன செய்தாலும் குற்றமில்லை" என்றான்.

அதைக் கேட்ட நீதிபதி தனது முட்டாள் தனத்துக்கு வெட்கமுற்றுத் திருடனைத் தண்டித்தான்.



# 7. குரங்கு

பிள்ளைகளே! இந்தக் குரங்கின் படத்தைப் பாருங்கள். குரங்கு ஏறக்குறைய மனிதனைப் போல் இருக்கிறதல்லவா? மனிதனுக்கு இல்லாத ஒரு அவயவம் குரங்குக்கு உண்டு. அது என்ன உங்களுக்குத் தெரியுமா? அதுதான் வால்.

சில குரங்குகளுக்கு வால் நீளமாய் இருக்கும். சில குரங்குகளுக்கு வால் குட்டையாய் இருக்கும். சிலவற்றிற்கு வாலே இல்லை. வாலில்லாத குரங்கை 'வாலில்லாக் குரங்கு' என்று சொல்வர்.

குரங்குக்கு இரண்டு கைகளும், இரண்டு கால்களும் உண்டு. அதன் உடம்பில் உரோமம் அடர்ந்திருக்கும். குரங்குகள் மரங்களின் மீது நன்ருக ஏறி இறங்கும். மரத்துக்கு மரம் அவை தாவிச் செல்லும். மரத்தின் கிளைகளைப் பிடித்துத் தொங்கும்.

குரங்கு காய், கனி, கிழங்கு, தின்பண்டங்கள் முதலியவைகளைத் தின்னும். அதன் வாயில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு பைகள் உண்டு. தான் தின்னும் பண்டங்களை அப் பைகளில் நிரப்பிக்கொள்ளும். பிறகு சிறிது சிறிதாகத் தின்னும்.

குரங்கு தன் குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும். குட்டிகள் தனது தாயின் வயிற்றை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளும். தாய்க் குரங்கு மரங்களின் மீது தாவும்போது குட்டி, தான் பிடித்த பிடியை விடாது.

குரங்கு அதிக அறிவுடையது. நாம் கற்றுக்கொடுப்பதை விரைவில் கற்றுக்கொள்ளும். இதனுல்தான் சிலர் குரங்கைப்பிடித்துப் பழக்கி வேடிக்கை செய்யக் கொண்டுவருகிருர்கள்.

குரங்கு மனிதனுக்குத் தீங்கு செய்யாது பழகிய குரங்கு, சாதுவாக இருக்கும். வளர்ப்பவர்களிடத்தில் அன்பாய் இருக்கும். அதற்குத் தொந்தரவு செய்தால் அது நம்மை விடாது.

# 8. முயற்சி

ஒரு கிராமத்தில் ஓர் ஏழைக் குடியானவன் இருந்தான். அவன் மிகவும் வருந்திப் பாடு பட்டுச் சில பூமியையும் தோட்டங்களையும் வாங்கினான். அவனுக்குச் சில பிள்ளைகள் இருந்தார்கள். அப்பிள்ளைகள் வருந்தி வேலை செய்ய மாட்டார்கள்.

குடியானவன் நெடுநாள் நோயாய் இருந்தான். அவன் மரணத்தறுவாயில் தனது மக்களைக் கூப்பிட்டு, "நான் தேடிய பொருள்களை எல்லாம் வாழைத் தோட்டத்தில் புதைத்து வைத்திருக்கிறேன்; நான் இறந்தபின் நீங்கள் அதைத் தோண்டி எடுத்துக்கொண்டு சுகமாக வாழுங்கள்" என்றான்.

சிறிது காலத்துக்குப் பின் குடியானவன் இறந்தான். அவனுடைய பிள்ளைகள் மண் வெட்டி முதலிய ஆயுதங்களை எடுத்துக் கொண்டு வாழைத் தோட்டத்திற்குப் போய் எங்கும் வெட்டிப் பார்த்தார்கள். ஒன்றும் அகப்படவில்லை. அதைக் கண்ட சோம்பேறிகள் மிகவும் வருந்தினர்.

மறுபடியும் முன்போலவே வாழைகளை நட்டார்கள்.

அவர்கள் தோட்டத்தை நன்ருக வெட்டினதால் வாழைகள் முன்னிலும் நன்ருய்ச் செழித்து வளர்ந்து பலன் கொடுத்தன. அப்பொழுது தகப்பனுர் சொன்ன கருத்து அவர்களுக்கு விளங்கிற்று. அதிலிருந்து அவர்கள் சோம்பலை விட்டுவிட்டனர். நன்ருய்த் தினமும் பாடுபட்டனர்.

வருஷத்திற்கு வருஷம் அவர்களது நிலங்கள் மிகுந்த பலன் கொடுத்தன. அதனுல் அவர்கள் மிகுந்த பணக்காரர்கள் ஆனுர்கள். அன்று முதல் அவர்கள் சுகமாகவும் கௌரவமாகவும் வாழ்ந்து வந்தார்கள்.

"முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்"

## 9. மூன்று மருந்துகள்

ஒரு காலத்தில் ஒரு வணிகன் இருந்தான். அவன் மிகுந்த பணக்காரன். அவன் ஒருநாள் வியாபாரத்தின் பொருட்டுச் சரக்குகளை வண்டியில் ஏற்றிக்கொண்டு சென்ருன். வழியில் காற்ருேடு பெரு மழை பெய்தது. அந்த மழையினுல் அவனது வண்டிமாடுகள் நடக்கவில்லை. அதனுல் அவன் வழியில் இருந்த ஒரு கிராமத்தில் உள்ள ஒரு வீட்டுத் திண்ணையில் தங்கினுன்.

அந்த வீட்டுக்காரனுக்கு இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் இருந்தார்கள். அவர்கள் மிகுந்த ஏழைகளாதலால் கஞ்சி குடிப்பார்கள். அவர்கள் கஞ்சியைக் குடித்தாலும் ஆரோக்கியமாகவும் திடமாகவும் இருந்தனர். அதைக் கண்ட வணிகன் மிகுதியும் ஆச்சரியங்கொண்டான்.

உடனே அந்த வணிகன் அவ்வீட்டுக்காரியைப் பார்த்து, "அம்மா! உனது பிள்ளைகளைப் பார்க்க எனக்கு அதிக சந்தோஷமாயிருக்கிறது. எனக்கும் இரண்டு பிள்ளைகள் உண்டு. அவர்களுக்குப் பொற்கிண்ணத்தில் பாலுஞ் சோறும் இடுகிறோம். உயர்ந்த இனிமையான உணவுக்குக் குறைச்சல் இல்லை. அவர்களை எந்நேரமும் தூக்கிக்கொண்டிருக்க வேலையாட்களுண்டு. அவர்கள் நடந்தே அறிய மாட்டார்கள். இவ்வளவு செல்வமாக வளர்ந்தாலும் எனது பிள்ளைகளுக்குச் சுகமே இல்லை. எந்நேரமும் அழுதுகொண்டே இருப்பார்கள். அவர்கள் உண்ட உணவு ஜீரணமாகிறதில்லை. அவர்கள் மருந்து தின்னாத நாளில்லை. ஆனால் உனது பிள்ளைகளோ இந்தக் கஞ்சியை இவ்வளவு பிரியமாகக் குடிக்கிறார்கள். இவ்வாறு குடிக்கக் காரணமென்ன? கஞ்சி குடிப்பவர்களுக்கு இவ்வளவு சுகமும் பலமும் எப்

படி உண்டாகும்? ஏதாவது மருந்துண்டா? அதைச் சொன்னால் நானும் என் பிள்ளைகளுக்குக் கொடுப்பேன்" என்றான்.

அதைக்கேட்ட அந்த வீட்டுக்காரி, "ஐயா! நான் எனது பிள்ளைகளுக்கு மூன்று மருந்துகள் கொடுக்கிறேன். எனது பிள்ளைகள் வருந்தி உழைத்துப் பசித்து வந்தால்தான் உணவு கொடுப்பேன்; அங்கு மிங்கும் போய் வந்தால் உணவு தருவதில்லை. அந்தந்த வேளையில் உணவு கொடுப்பேன். இவர்களுக்குத் தினமும் இனிப்பான உணவு கொடுப்பதில்லை; காய்கறி பதார்த்தங்களை அளவாகக் கொடுப்பேன். எனது பிள்ளைகள் திடமாயும் ஆரோக்கியமாயும் இருப்பதற்கு நான் கொடுக்கும் மருந்துகள் இந்த மூன்றுதான்; வேறு மருந்துகள் இல்லை" என்றாள்.

அதைக் கேட்ட வர்த்தகன், தன் பிள்ளைகள் சுகமில்லாதிருப்பதற்குத் தானே காரணம் என்று எண்ணினான். அவள் சொல்லியபடியே செய்வதாகப் போனான்.

# 10. உபாத்தியாயர்

இரத்தினபுரி என்ற ஊரில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அந்தப் பள்ளிக்கூடத்தில் ஒரு உபாத்தியாயர் இருந்தார். அவர் நன்ருய்ப் படித்தவர்.

அவர் ஒரு சமயம் பாடஞ் சொல்லிக்கொண்டிருக்கும்போது, பிள்ளைகளைப் பார்த்து, "நமக்கு வாய் எத்தனை ?" என்ருர்.

ஒருவன், "வாய் ஒன்று" என்ருன்.

உபாத்தியாயர், "காது எத்தனை" என்ருர்.

இன்ெனுருவன், "காது இரண்டு" என்ருன்.

உபாத்தியாயர், "பிள்ளைகளே! நமக்கு வாய் ஒன்றும் காதுகள் இரண்டுமாக இருப்பானேன் ?" என்று கேட்டார்.

அதற்கு ஒரு பையன் "நமது முகத்தில் இரண்டு வாய் வைப்பதற்கு இடமில்லை. அதனுல்தான் கடவுள் ஒரு வாய் வைத்தார்" என்ருன்.

உபாத்தியாயர், "அது சரியல்ல. வீரய்யா ! நீ சொல்" என்ருர்.

வீரய்யன், "ஐயா ! இரண்டு பக்கத்திலும் இரண்டு காதுகள் இருந்தால்தான் முகத்துக்கு

அழகு; ஒரு பக்கத்தில் மாத்திரம் ஒரு காது இருப்பின் விகாரமா யிருக்கும்" என்றான்.

உபாத்தியாயர் ஒவ்வொருவராய்க் கேட்டுக் கொண்டே வந்தார். ஒவ்வொரு பையனும் ஒவ்வொன்றைச் சொன்னான். அவை ஒன்றும் அவருக்குச் சம்மதமாக இல்லை. ஆதலால் உபாத்தியாயர் முடிவாக எல்லோரையும் பார்த்து, "நாம் பேசுவது சிறிதளவாக இருக்க வேண்டும் என்று தெரிவிக்க வாய் ஒன்றையும், நாம் கேட்பது இரட்டிப்பாக இருக்கவேண்டும் என்று அறிவிக்கக் காதுகள் இரண்டையும் கடவுள் நமக்குப் படைத்தார்" என்று போதித்தார்.

பிறகு ஒரு பையனைப் பார்த்து, "இப்பொழுது நான் சொன்னதன் கருத்தைச் சொல்லுவாயா?" என்று கேட்டார்.

அப்பையன், "நாம் பேசுவது சுருக்கமாய் இருக்கவேண்டும்; கேட்பது விரிவாய் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தினால் நமக்கு வாய் ஒன்றும் காதுகள் இரண்டுமாய் இருக்கின்றன" என்றான்.

உபாத்தியாயர் அவன் சொல்வது சரி என்று ஒப்புக்கொண்டார்.

# 11. தண்ணீர்

நாம் தாகம் எடுத்தால் தண்ணீர் குடிக்கிறோம். உடல் சுத்தம் பெற நீரில் குளிக்கிறோம். நமது உணவுப் பொருள்களைச் சமையல் செய்யவும் நீர் அவசியமாகிறது. ஆதலால் நமது உயிர் வாழ்க்கைக்குச் சுத்தமான தண்ணீர் வேண்டுமென்பது நன்கு விளங்குகிறதல்லவா ?

அத்தண்ணீர் கிடைக்கும் இடங்கள் ஆறு, குளம், கிணறு முதலிய நீர் நிலைகளாகும். அவற்றைச் சுத்தமாக வைத்துப் பாதுகாத்தல் நமது கடமையாகும்.

ஆற்றுத்தண்ணீர்:—ஆற்று நீர் சாதாரணமாக மண்ணையும், செடி கொடிகளையும் அடித்துக்கொண்டு வருவதால் கலங்கலாக இருக்கும். அத்தண்ணீரைச் சுத்தமாக வடிகட்டிக் காய்ச்சிக் குடிக்கவேண்டும். இவ்வாறு செய்வதால் அழுக்குகள் நீங்கிவிடும்.

தண்ணீர் எடுக்கும் துறையில் குளிப்பதும், துவைப்பதும், ஆடு மாடுகளைக் குளிப்பாட்டுவதும் கூடாது. இவைகளுக்காக வேறு துறைகள் இருக்கவேண்டும்.

ஆற்று மணலில் தோண்டப்படும் ஊற்று நீர் தெளிவாக இருக்கும். அது சுத்தமானது. நாம் அதனை உபயோகப்படுத்தலாம். அவ்வூற்றுக்களை அசுத்தஞ் செய்வதும் தப்பு.

குளத்து நீர்:—துணி துவைக்கவும் குளிக்கவும் வேறு குளம் இருக்கவேண்டும். குடிக்கத் தண்ணீர் எடுக்கும் குளத்தில் குளிக்கவும் துணி துவைக்கவும் கூடாது. கை கால் கழுவுவதும் எச்சில் உமிழ்வதும் கூடாது. தண்ணீர் அசுத்தமாகி விடும். மரஞ் செடிகளையும் பக்கத்தில் வைத்துப் பயிர் செய்யலாகாது. அவற்றின் இலைகள் விழுந்து அழுகித் தண்ணீரைக் கெடுத்துவிடும். குடி தண்ணீரைக் காய்ச்சிக் குடிப்பது நல்லது.

கிணற்று நீர்:—ஆழமில்லாத கிணற்று நீர் அசுத்தமாயிருக்கும். ஆழமான கிணற்று நீரே குடிப்பதற்குத் தக்கது. சுற்றிலும் தங்கும் அழுக்கு நீர் கிணற்றுக்குள் இறங்காமல் சுற்றிலும் சுவர் இருக்கவேண்டும். மரங்களும் இருக்கக்கூடாது. வியாதியாளரும் அசுத்தமானவர்களும் கிணற்றுக்குள் இறங்கி அசுத்தம் செய்யாமல் பாதுகாக்க வேண்டும். ஜனங்கள் குளிப்பதற்குப் பல தொட்டிகள் கட்டப்படவேண்டும். மாட்டுத் தொழுவம், சாக்கடை முதலியவைகள் அருகே இருத்தலாகாது.

மழை நீர் சுத்தமானதே. ஆனால் அது வீழ்ந்த இடத்திற்குத் தக்கவாறு நிறமும் சுவையும் அடைகிறது. ஆதலால் அதையும் காய்ச்சிக் குடிப்பது நலம்.

## 12. புலவர் வறுமை

முற்காலத்தில் சத்திமுற்றம் என்ற கிராமத்தில் ஒரு புலவர் இருந்தார். அவரது மனைவி உத்தம குணம் உடையவள். புலவர் எப்பொழுதும் படித்துக்கொண்டே இருப்பார். அவருக்குச் சிறிது பொருளுண்டு.

அவருடைய மனைவி அந்தப் பொருளைக் கொண்டே குடும்பத்தை நடத்திக்கொண்டு வந்தாள். நாளடைவில் வறுமையால் வருந்தினள். ஆனாலும் அவள் ஊக்கம் குறையாமல் பாடுபட்டுத் தமது கணவனைக் காப்பாற்றி வந்தாள்.

ஒருநாள் புலவர், தமது மனைவி அரும்பாடு படுவதை உணர்ந்தார். அப்பொழுதே அவர் மனம் சகிக்காமல் தான் பாண்டிநாடு சென்று பொருள் தேடி வருவதாகத் தன் மனைவியிடம் சொல்லி விட்டு மதுரைக்குச் சென்றார்.

அங்கு, புலவர் பல நாள்கள் காத்துக் கொண்டிருந்தும் பாண்டியனைக் காண முடியவில்லை. அவர் ஒருநா ளிரவில் இருப்பதற்கும் இடமின்றிப் பனி வாடையினல் மெலிந்து ஒரு தோரடியில் படுத்துக்கொண் டிருந்தார். அவர் மனையாளை விட்டுவந்து நெடுநாளானதே என்ற கவலையால் உறக்கம் இன்றி விழித்துக்கொண் டிருந்தார்.

அப்பொழுது சில நாரைகள் வானத்தில் பறந்து சென்றன. புலவர் தமது தரித்திரத்தின் நிலையையும் தன் நிலையையும் விளக்கி "நாராய்! நாராய்! செங்கால் நாராய்!" என்ற பாட்டைப் பாடிக்கொண்டிருந்தார்.

அச் சமயத்தில் அரசன் நகர் சோதனை செய்வதற்கு மாறுவேடந் தரித்து வந்தனன். அவன் அச்செய்யுளைக் கேட்டுச் சந்தோஷித்து அரண்மனை சென்று, மறுநாள் அவரைச் சபைக்கு அழைத்து வரச் செய்தான். அவருக்கு ஆடை அணிகளும் பல வரிசைகளும் கொடுத்து அனுப்பினன். வரிசை பெற்ற புலவரும் மன மகிழ்ச்சியுற்றுத் தன் ஊர் சென்று சுகமாக வாழ்ந்து வந்தார்.

# 13. ஜீவகாருண்யம்

நெடுங்காலத்திற்கு முன் நமது நாட்டிலிருந்த அரசர்களில் சிபி ஒருவன். அவன் அபயம் என்று வந்தவர்களை ஆதரிப்பான். தரும குணத்தில் சிறந்தவன். அவனது புகழ் விண்ணுலகம் வரையிலும் எட்டியது.

இந்திரன் ஒரு தரம் சிபியைப் பரிசோதிக்க எண்ணித் தான் பருந்து வடிவெடுத்தான். அக்கினிதேவன் புரு வடிவு கொண்டான். இருவரும் பூலோகத்திற்கு வந்தனர்.

சிபி சிங்காசனத்தில் இருந்து நீதி செலுத்திக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் அந்தப் புருவானது களைத்துத் தவித்து ஓடி வருவதுபோல வந்து, சிபியினது பாதத்தில் வீழ்ந்தது. அதைக்கண்ட அரசன், "அஞ்சாதே" என்று அன்புடன் அப் புருவைக் கையில் எடுத்தான். அதன் களைப்புத் தீர உபசரித்தான்.

உடனே ஒரு பருந்தும் அந்தப் புருவைத் துரத்திக் கொண்டு வந்து சிபியை அடைந்தது. அரசனிடத்தில் புரு இருப்பதைக் கண்டு, "அரசே! எனக்கு மூன்று நாளாக இரையே கிடைக்கவில்லை! இப்



புருவை இன்றுதான் கண்டேன். அதைத் தின்பதற்குத் தொடர்ந்து வந்தேன்; எனது புருவை என்னிடம் கொடுத்துவிட வேண்டும்" என்று கேட்டது.

சிபி, "ஓ பருந்தே! அந்தப் புரு என்னிடம் அடைக்கலம் என்று வந்து வீழ்ந்தது. அடைக்கலப் பொருளைக் காத்தலினும் உத்தம தருமம் வேறு இல்லை; நீயும் பசியுடன் வந்தாய். உனக்கும் உணவு தருகிறேன்" என்றான்.

அதற்கு அந்தப் பருந்து, "நீ என்ன தந்தாலும் எனக்கு வேண்டாம்; அந்தப் பறவையை என்னிடம் விட்டு விடு" என்றது. சிபி எவ்வளவோ சமாதானம் சொல்லியும் அந்தப் பருந்து கேட்கவில்லை. கடைசியாக அவ்வரசன், அந்தப் புரு எடையுள்ள தசையைத் தன் உடம்பிலிருந்து அறுத்துத் தருவதாகச் சொன்னான். அந்தப் பருந்து அதற்குச் சம்மதித்தது.

சிபிச் சக்கரவர்த்தி மனமகிழ்ந்து ஒரு தராசைக் கொண்டுவரக் கட்டளையிட்டான். ஒரு தட்டில் அந்தப் புருவை வைத்தான்; மற்றொரு தட்டில் தனது சதையை வாளால் அரிந்து வைத்தான். தட்டு சமமாகவில்லை. உடலில் உள்ள சதை முழுவதையும் அரிந்து

வைத்தும் சமமாகவில்லை. கடைசியாகத் தானே தட்டில் ஏறினன். அப்பொழுதுதான் இரு தராசுத் தட்டுகளும் சமமாக நின்றன. இதைக் கண்ட யாவரும் திகைத்தனர்.

அப்பொழுது இந்திரனும் அக்கினி தேவனும் தமது வடிவுடன் தோன்றி அவனது அன்புக்கு வியந்து அவனுக்கு வேண்டும் வரந் தந்து போயினர்.

ஆகா! இவனது தரும குணத்தை என்னென்போம்!

## 14. கழுகும் பூனையும்

ஓர் ஆற்றங்கரையில் ஆலமரம் ஒன்றிருந்தது. அந்த மரத்தில் ஒரு பொந்திருந்தது. அம் மரப்பொந்தில் ஒரு கழுகு வாசஞ்செய்து கொண்டிருந்தது. அதற்கு அதிக வயது சென்று விட்டதால் கண் தெரியவில்லை. ஆதலால் இரைத்தேடித் தின்பது வருத்தமாய் இருந்தது. அந்தப் பொந்தில் இருந்த பறவைகளெல்லாம் அந்தக் கிழக் கழுகுக்குச் சிறிது ஆகாரங் கொடுத்து வந்தன.

அந்தக் குஞ்சுகளைப் பிடித்துத் தின்ன ஒரு பூனை அங்கு வந்தது. அதைக் கண்ட

குஞ்சுகள் எல்லாம் கூச்சலிட்டன. அதைக் கண்ட கழுகு, 'நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? இங்கே எது வந்தது?' என்றது.

அதைக்கேட்ட பூனை தைரியமாய்க் கழுகினிடம் போய், "சமர்த்தனே! உனக்கு வந்தனம்" என்றது. அதைக் கழுகு கேட்டு, "நீ சீக்கிரம் இவ்விடம் விட்டுப்போ, இல்லாவிடில் சாவாய்" என்றது.

பூனை, "என் வரலாற்றைக் கேள்; பிறகு கொல்லவேண்டுமானால் கொல்" என்றது.

கழுகு, பூனையைப் பார்த்து, "நீ ஏன் வந்தாய்?" என்றது.

பூனை, "நான் தினமும் கங்கையில் நீராடி விரத மிருக்கிறேன். வயது சென்ற தருமவான்களிடத்தில் சாஸ்திரம் கேட்கவேண்டும் என்று பெரியோர் சொல்லுவார்கள். நீயும் தருமவானாய் இருக்கிறாய் என்று கேள்விப்பட்டேன்; கொலை செய்வது மிகுந்த பாவம். ஆதலால், நான் கொலை செய்வதை விட்டு விட்டேன், காய்கனிகளைத் தின்று வருகிறேன்" என்று உரைத்து கழுகுக்கு நம்பிக்கை வரப் பண்ணி அப் பொந்தி லிருந்தது.

பூனை அங்கிருந்துகொண்டு தினமும் ஒவ்வொன்றாகக் குஞ்சுகளைத் தின்றுவந்தது.

குஞ்சுகளை இழந்த பறவைகளெல்லாம் தமது குஞ்சுகளைத் தேடத் தொடங்கின. இதைக் கண்ட பூனை அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டது. அங்கே கிடந்த எலும்புகளைப் பார்த்த பறவைகள் எல்லாம் அக்கழுகே தமது குஞ்சுகளைக் கொன்றது என்று எண்ணி அக் கழுகைக் கொத்திக் கொன்றுவிட்டன.

ஆதலால், பிள்ளைகளே! ஒருவனுடைய குணம் தெரியாமல் அவனுக்கு இடம் கொடுக்கலாகாது.

## 15. நித்திரை

நமது தேக சுகத்திற்கு உணவும், உழைப்பும் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் ஓய்வு. எப்பொழுதும் வேலை செய்து கொண்டே யிருந்தால் நமக்குக் களைப்புண்டாகும். தேகாப்பியாசம் செய்தாலும் களைப்பு உண்டாகும். அந்தக் களைப்பைப் போக்க நாம் இளைப்பாறுதல் வேண்டும்.

பகற் காலத்தில் வருந்தி உழைப்பவர்கள் இரவில் அயர்ந்து நித்திரை செய்யவேண்டும். பகலில் அலைந்து திரியும் மிருகங்களும் இரா

வில் தூங்குகின்றன. பகலில் பறந்து திரியும் பறவைகளும் இரவில் உறங்குகின்றன. சில மரங்களுக்கும் தூங்குமூஞ்சி மரம் என்று பெயர். ஆதலால் நித்திரை செய்தல் ஜீவராசிகளுக்குக் கட்டாயம் வேண்டியதே.

நித்திரை செய்வதற்கு ஏற்ற காலம் இராப் பொழுதேயாம். இரவில் சீக்கிரம் படுத்து, அதிகாலையில் விழித்தெழுதல் நல்ல பழக்கமாகும். சிறுவர்கள் இரவில் ஒன்பது மணி நேரமும், பெரியோர்கள் ஆறு மணி நேரமும் அவசியமாகத் தூங்க வேண்டும். பகற்காலத்தில் தூங்கக் கூடாது. தூங்கினால் சோம்பல் உண்டாகும், வேலைகள் கெட்டுவிடும். இரவில் நகர் காவல் செய்பவர்களும் நடு இரவில் தூங்க வேண்டும். "சேமம் புகினும் சாமத் துறங்கு" என்பது நம்மவர் சொல்லும் பழமொழியாம். இரவில் நாடகம் பார்த்தலும், அதிக நேரம் படித்தலும், வீணாகப் பேசிக்கொண்டு கண் விழித்தலும் சரீர சௌக்கியத்துக்குக் கெடுதலாகும்.

உண்டவுடனே படுக்கலாகாது. சாப்பிட்டபின் அரைமணி நேரம் கழித்துக் கண்ணுறங்க வேண்டும். நாம் படுக்கும் இடத்தைப்பற்றியும் கவனிக்க வேண்டும். நாம் எப்பொழுதும் கட்டிலில் படுப்பது உத்தமம். ஈரமில்லாத சம

தரையிலும் படுக்கலாம். வெறுந் தரையில் படுக்கலாகாது. படுத்துக் கொள்ளும்போது சுத்தமான பாயையும், தலையணைகளையும் உபயோகிக்க வேண்டும். பகலில் அவைகளை வெயிலில் உலர்த்த வேண்டும். காற்றோட்டமான இடத்தில் நித்திரை செய்வது நன்று. மரத்தடியில் உறங்கலாகாது. படுத்துக் கொள்ளும்போது துணியால் உடம்பை மூடிக் கொண்டு தூங்க வேண்டும்.

இவ்வாறு இரவில் அயர்ந்து நித்திரை செய்வதால் உடலில் தோன்றிய களைப்பும், சோர்வும் நீங்கும். புதிய பலம் உண்டாகும். உற்சாகமும் சுறுசுறுப்பும் உண்டாகும்.

தூக்கக் குறைவு நேரிட்டால் பலக் குறைவு தலைவலி முதலிய பல நோய்கள் உண்டாகும்.

## 16. மழை

பிள்ளைகளே! நீங்கள் குடிக்கும் தண்ணீருக்கு முக்கிய ஆதாரம் என்ன? மழை என்பதை நீங்கள் அறிவீர்கள். மழை பெய்யாவிடில் நமக்குத் தண்ணீர் இல்லை. மழை பெய்யாவிடில் புல் பூண்டுகள் முளையா. மழையே

உலகத்திற்குத் துணைக்காரணம். ஆதலால், "மாரியல்லது காரியமில்லை" என்று ஔவை யார் அருளியிருக்கிறார்.

மழைக்குக் காரணம் மேகமே. நீங்கள் சிறிது நீரைக் கல்லின்மேல் தெளியுங்கள். அந்த நீர் சிறிது நேரத்தில் மறைந்து விடு கிறது. ஈரமான வஸ்திரத்தை வெயிலில் போடுங்கள். இந்தத் தண்ணீர் சிறிது சிறிதா கக் குறைந்துபோகும்.

இந்தத் தண்ணீர் எப்படிக் குறைந்துபோ கிறது? சூரிய வெப்பத்தால் இந்தத் தண்ணீர் ஆவியாக மாறிவிடுகின்றது.

இதுபோலவே ஆறு, குளம், ஏரி, கடல் முதலிய நீர் நிலைகளிலுள்ள நீரானது சூரிய னது வெப்பத்தால் ஆவியாக மாறி மேலே செல்லுகிறது. இந்த ஆவி மிகவும் லேசான படியால் மேலே செல்லும். இந்த நீராவிக் கூட்டத்திற்கு மேகம் என்று பெயர். இந்த நீராவி குளிர்ச்சி அடைந்தால் கண்ணுக்குத் தோன்றும்.

இந்த மேகங்கள் பூமிக்குமேல் இரண்டு மூன்று மைல் தூரத்தில் சஞ்சரிக்கின்றன. இந்த மேகங்களின்மீது குளிர்காற்றுப் பட்ட வுடன் நீராக மாறும். அந்த நீர் காற்றைவிடக் கனமான பொருளாதலால் துளித் துளியாய்

பூமியின்மீது விழும். இதுவே மழை எனப்படும்.

மலைநாடுகளிலும் சோலைகள் அடர்ந்த இடங்களிலும் மேகம் மிகுதியும் சஞ்சரிக்கும். ஆதலால் அவ்விடங்களில் மழை அதிகமாய்ப் பெய்யும். மழை சில இடங்களில் சிறிதளவாகப் பெய்யும். மழை பெய்வதால் எல்லா உயிர்களும் வாழ்கின்றன; மரம், செடி, கொடிகள் வளர்கின்றன. ஆகாயம் சுத்தமாகின்றது.

## 17. ஈக்களும் கொசுக்களும்

ஈக்களும் கொசுக்களும் உருவத்தில் சிறியன. ஆனாலும் அவை அசுத்தத்தை உண்டு பண்ணிப் பல நோய்களைப் பரவச் செய்கின்றன!

ஈக்கள், மலம் முதலிய அசுத்தங்களின் மேல் உட்காரும். பிறகு நமது உணவுகளிலும் உட்கார்ந்து கொடிய நோய்களை உண்டு பண்ணும். நமது உடம்பிலுள்ள புண்களின்மேல் உட்கார்ந்து புண்ணைப் பரவச் செய்யும். நோயுள்ள கண்ணை மொய்த்துக் கண்ணோயைப் பரவச் செய்யும்.

கொசுக்கள் நம்மைக் கடித்து விஷக் கிருமிகளை நமது இரத்தத்தில் பரவச் செய்கின்

றன. அதனுல் நமக்குக் காய்ச்சல், கால் வீக்கம் உண்டாகின்றன.

ஆதலால், பிள்ளைகளே! இவ்வித நோய்கள் உங்களை அணுகாதபடி பாதுகாத்துக் கொள்வது உங்கள் கடமை அல்லவா?

நீங்கள் ஒவ்வொருவரும் கீழ்கண்ட விதிகளைக் கையாளுதல் வேண்டும்:

1. உங்கள் வீட்டுக்கருகில் உள்ள சாக்கடை முதலிய அசுத்தங்களை அப்புறப்படுத்த வேண்டும். அடிக்கடி சுத்தம் செய்து ஈக்களும் கொசுக்களும் விருத்தியாகாதபடி தடுக்க வேண்டும்.
2. வீட்டுக்குள் ஆடு மாடுகளைக் கட்டி அசுத்தம் செய்யலாகாது.
3. ஈக்களும் கொசுக்களும் மொய்த்த தின்பண்டங்களை வாங்கித் தின்னலாகாது. ஈ மொய்த்த உணவுகளையும் உண்ணலாகாது.
4. உண்ணும் உணவுப் பதார்த்தங்களை நன்ருக மூடி வைக்க வேண்டும். இந்த விதிகளை நீங்கள் கைக்கொண்டு ஒழுகினுல் நோயின்றி நெடுங்காலம் சுகமாக வாழ்வீர்கள்.

# 18. குரு பக்தி


ஒரு காட்டில் வேடர்கள் வசித்து வந்தார்கள். அந்த வேடர்களுக்குத் தலைவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு **ஏகலைவன்** என்ற ஒரு பிள்ளை இருந்தான். அவன் தனது குலத் தொழிலாகிய வில் வித்தையைக் கற்றுக்கொள்ள ஆசைப்பட்டான்.

**துரோணாச்சாரி** என்ற ஒரு குருவை அடைந்து வணங்கி நின்றான். அவன் தனது ஆசையை அவருக்கு உரைத்து வில் வித்தை கற்றுக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொண்டான்.

குரு சிரித்து, "உனக்கு வில் வித்தை கற்றுக் கொடுக்க நேரமில்லை" என்றதும், ஏகலைவன் அவரை வணங்கி விடை பெற்றுச் சென்றான்.

ஏகலைவன் தனது இருப்பிடம் சென்று துரோணரைப் போல ஓர் உருவம் செய்து உயர்ந்த பீடத்தில் அதை வைத்துத் தினமும் அதைப் பூசித்து வந்தான். தினந்தோறும் அந்தச் சிலைக்கு முன் இருந்து வில்லை வளைத்துப் பல வித்தைகளையும் செய்து கற்றுக் கொண்டான்.

சில நாட்களுக்குப் பின் துரோணர் தன் மாணுக்கர்களுடன் ஏகலைவன் இருந்த காட்டுக்குச் சென்ருர். அதைக்கண்ட வேடன் எதிர் சென்று வணங்கித் தனது இருப்பிடத்துக்கு அழைத்துச் சென்ருன்.



அவர் அவனைப் பார்த்து "உனது குரு யார்?" என்றதும், அவன் "சுவாமி! தாங்களே என்னுடைய குரு. தங்களுடைய கிருபையால் தான் எல்லா வித்தைகளையும் யான் கற்றுக் கொண்டேன்" என்ருன்.

துரோணர், "குருவுக்குத் தட்சணை கொடுக்க வேண்டாமா?" என்ருர்.

அதற்கு அவன், "சுவாமி! வேண்டிய தைக் கேளுங்கள்" என்றான்.

அதற்கு அவர் சிறிது யோசித்து, "உனது வலது கைப் பெருவிரலைக் கொடு" என்றதும், அவன் தனது பெரு விரலைத் துண்டித்துக் கொடுத்தான்.

பிள்ளைகளே! குரு பக்தியைப் பார்த்தீர் களா! ஏகலைவன் எவ்வளவு பக்தியுடையவன். நீங்களும் அவனைப்போலவே குருவினிடம் அன்பா யிருங்கள். எல்லா நன்மைகளையும் பெறுவீர்கள்.

## 19. கம்பர்

சோழ தேசத்தில் உள்ள அழுந்தூர் என்ற ஊரில் ஒரு வேளாளன் இருந்தான். அவனு டைய பெயர் ஆதித்தன். அவன் ஒரு பிடாரி கோவிலில் பூசை செய்து வந்தான். அவனு டைய பிள்ளை கம்பர்.

கம்பர் சிறு பிள்ளையாய் இருக்கும்பொ ழுதே ஆதித்தன் இறந்து போனான். தாய் அப் பிள்ளையை வைத்துக்கொண்டு மிகவும் வருந்தினாள்.

வெண்ணெய்நல்லூர் என்ற கிராமத்தில் சடையப்பன் என்று ஒருவன் இருந்தான்.

அவன் மிகுந்த பணக்காரன். அவனுக்கு அதிகமான வயல்களும் தோட்டங்களும் இருந்தன. கம்பருடைய தாய் அவனிடத்தில் சென்று வேலைக்கு அமர்ந்தாள்.

சடையப்பனுக்குப் பல பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் தக்க பருவத்தில் பள்ளிக்கூடம் சென்றார்கள். அவர்களோடு கம்பரும் சென்று படித்துக்கொண்டு வந்தார். நாளடைவில் கம்பர் மற்ற பிள்ளைகளைவிட கெட்டிக்காரராய் விளங்கினர். அதிக விரைவாகத் தமிழ் நூல்கள் பலவுங் கற்றனர். கம்பர் கல்வியில் சிறந்து விளங்கினர். விரைவாய்ப் பாட்டும் பாடுவார். சடையப்பன் அதைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான். ஆதலால் கம்பரை மிகுந்த அன்போடு ஆதரித்து வந்தான்.

ஒரு நாள் சோழராஜன் கம்பருடைய பெருமையைக் கேள்வியுற்று அவரை வரவழைத்தான். கம்பரது கல்வித் திறமைக்கு மெச்சி அவரைத் தனது சமஸ்தானத்தில் புலவராக அமர்த்திக்கொண்டான். "கவிச் சக்கரவர்த்தி" என்ற பட்டமும் அளித்தான். அன்றுமுதல் யாவரும், "கல்வியில் பெரியார் கம்பர்" என்று அவரைப் பாராட்டத் தொடங்கினர்கள். கம்பரது திறமையை நாளடைவில் கண்ட அரசன் அவருக்குப் பல விருதுகள்

கொடுத்தான். கம்பரும் மன மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார்.

கம்பரது கல்வித் திறமையைக் கேட்ட பல அரசர்களும் அவரை வரவழைத்து நன்கு பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

கம்பருக்கு ஒரு பிள்ளை யுண்டு. அவனுக்கு **அம்பிகாபதி** என்று பெயர். அவனும் தந்தையைப் போலவே கல்வியில் சிறந்து விளங்கினான்.

கம்பர் இராமனது சரித்திரத்தைத் தமிழில் பாட்டாகப் பாடினார். அதற்குக் **கம்பராமாயணம்** என்று பெயர். கம்பர் இன்னும் பல நூல்களையும் பாடி யிருக்கிறார். கம்பர் ஏறக்குறைய எண்ணூறு வருஷங்களுக்கு முன் இருந்தவர்.

## 20. கிருஷ்ணன்

முற்காலத்தில் மதுராபுரியில் **உக்கிரசேனன்** என்ற ஒரு அரசன் இருந்தான். அவனுக்குக் **கம்சன்** என்ற பெயருடைய ஒரு புதல்வனும், **தேவகி** என்ற பெயருடைய ஒரு புதல்வியும் இருந்தனர். தேவகி நல்ல அழகுடையவள். உயர்ந்த நற்குணங்கள் உடையவள். கம்சன் மகா துஷ்டன். இளமையிலேயே

பிறரைத் துன்புறுத்துவான். நல்ல புத்தி புகட்டினுலும் அவன் கேட்கமாட்டான்.

தேவகிக்குத் தக்க பருவம் வரவே உக்கிரசேனன் அவளை வசுதேவனுக்கு மணஞ் செய்து கொடுத்தான். அப்பொழுது ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. "ஏ கம்சா! இதோ உன் தங்கையின் எட்டாவது பிள்ளையினுல் உனக்கு மரணம்" என்று சொன்னது.

அதைக் கேட்ட கம்சன் மிகவுஞ் சினங் கொண்டு தங்கையையும் தங்கை புருஷனையும் சிறையில் வைத்தான். அவர்களுக்குப் பிறந்த ஏழு பிள்ளைகளையும் முறையாகக் கொன்ருன்.

எட்டாவது பிள்ளை பிறந்தவுடனே, வசுதேவன் அப்பிள்ளையை இரகசியமாக எடுத்துச் சென்று இடைச்சேரியில் வைத்துவிட்டு அங்கு பிறந்திருந்த பெண் குழந்தையை எடுத்துக் கொண்டுவந்து தேவகியிடத்தில் வைத்துவிட்டுக் கம்சனுக்கு அறிவித்தான். கம்சனும் அதைக் கொல்லத் தொடங்கும் போது அப் பிள்ளை மாயமாய்ச் சென்று விட்டது.

வசுதேவருடைய மற்ருெரு மனைவி ரோகிணி. அவள் வயிற்றில் பிறந்தவன் பலராமன். பலராமனும் இடைச்சேரியில் கிருஷ்ணனுடன் வளர்ந்து வந்தான்.



கம்சன் கிருஷ்ணனைக் கொல்ல பலதர மும் முயற்சி செய்தான். எல்லாம் வீணுயின. கடைசியில் கிருஷ்ணனை மதுரைக்கு அழைத் துக் கொல்ல வழி தேடினுன். அப்பொழுது கிருஷ்ணன் மாமனுகிய கம்சனைக் கொன்று சிறையில் இருந்த உக்கிரசேனனையும் விடு வித்தான்.

கிருஷ்ணன் விதர்ப்பதேசத் தரசன் மக ளாகிய ருக்மிணியை மணம் செய்துகொண் டான். கிருஷ்ணன் ஜராசந்தன், நரகாசுரன் முதலிய தீயவர்களைக் கொன்று நெடுங்காலம் வாழ்ந்திருந்தான்.

## 21. தேகப் பயிற்சி

சம்பந்தன் ஒரு நல்ல பையன். தினமும் பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காகச் சென்று வரு வான். சம்பந்தன் தனது பாடங்களைச் செவ் வையாகப் படிப்பான். அவனிடத்தில் எல் லோரும் அன்பாய் இருப்பார்கள். ஒரு நாள் அவன் பள்ளிக்கூடத்தி லிருந்து வந்தான். அப்பொழுது அவனுடைய தாயார் அவனைப் பார்த்து, "நீ இப்போதுதான் பள்ளிக்கூடத்தி லிருந்து வருகின்ருயா?" என்ருள்.

**சம்பந்தன்** — ஆம் அம்மா! இப்போதுதான் வருகிறேன்.

**தாயார்** — இன்று பள்ளிக்கூடத்தில் என்னென்ன பாடங்கள் படித்தாய்?

**சம்பந்தன்** — இன்றைக்குத் தமிழ் வாசக பாடம் படித்தேன். வாய்பாடு ஒப்பித்தேன். கணக்கு செய்தேன். படம் வரைந்தேன். தேகப்பயிற்சியும் செய்துவந்தேன்.

**தாயார்** — நல்லது. இவைகளையெல்லாம் சரியாகச் செய்தாயா?

**சம்பந்தன்** — ஆம், சரியாகச் செய்தேன். இன்று எல்லாக் கணக்குகளையும் செய்தேன். செவ்வையாகப் பாடங்களையும் ஒப்பித்தேன். இன்று எங்கள் பள்ளிக்கூடத்திற்கு ஒரு புதிய உபாத்தியாயர் வந்து சில விளையாட்டுகளைக் கற்பித்தார். அவை எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தன. அவற்றிற்குத் தேகப்பயிற்சி என்று பெயர் சொன்னார். என்னைப் படிக்கத்தானே அனுப்பினீர்கள். அந்த விளையாட்டுக்களை ஏன் கற்பிக்கிறார்கள்? அவற்றால் என்ன பயன்?

**தாயார்** — அப்பா! நீ தேகப்பயிற்சி செய்வதால் உனது அவயவங்களாகிய கை, கால்

முதலியன உழைக்கின்றன அல்லவா? அப்போது உனது உடம்பி லிருந்து வியர்வை நீர் வெளிவரும். அந்த நீரின் மூலமாய் உடம்பிலுள்ள அசுத்தங்கள் நீங்கிவிடும். நரம்புகள் தடித்து இரத்தம் உடலெங்கும் பரவும். அதனால் உனக்கு நோய் வராது. சுறுசுறுப்பாய் இருக்கும். பலமும் ஞாபக சக்தியும் படிப்பும் அதிக மாக விருத்தியாகும். இவ் விளையாட்டு எவ்வளவு நன்மையைத் தருகிறது பார்த் தாயா?

**சம்பந்தன்** — அம்மா! நான் தினமும் பள்ளிக் கூடத்தில் இருந்து வந்தபின் தெருவில் பிள்ளைகளுடன் விளையாடுகின்றேனே; இது போதாதா?

**தாயார்** — நீ தெருவில் துஷ்டர்களுடன் சேர்ந்து விளையாடுவாய். அவர்கள் துஷ்டத் தனத்தையும் கற்றுக்கொள்ள நேரிடும். அவர்களது தீய பழக்கங்களும் உனக்கும் உண்டாகும். இதனால் உனது நல்ல நடத் தையும் படிப்பும் கெட்டுவிடும்.

இவ்வாறு தெருவில் விளையாடுவதை விட்டுவிட்டுப் பள்ளிக்கூடத்தில் விளையாடுவது உனக்கு அதிக நன்மை தரும். உன்னையொத்த நல்ல பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடுவாய். அவர்களது நல்ல நடத்தையும் உனக்கு உண்

டாகும். தேக பலமும் ஞாபக சக்தியும் விருத்தியாகும். ஆதலால், பாடசாலையில் உபாத்தியாயர்கள் கற்பிக்கும் தேகப்பயிற்சியைப் பிள்ளைகள் தினமும் தவறாமல் செய்து வரவேண்டும்.

## 22. மங்கம்மாள்

மதுரையை அரசாண்ட நாயக்க மன்னர்களில் சிறந்தவர் **திருமலை நாயக்கர்**. மதுரை நகரை நினைக்கும் பொழுதெல்லாம் திருமலை நாயக்கருடைய மகால் நினைவுக்கு வரும். மதுரைமா நகரத்தின் சிறப்புக்குக் காரணம் இவரே. இவரே மதுரையில் அழகான கட்டடங்களைக் கட்டியவர்.

திருமலை நாயக்கருடைய பேரர் **சொக்கநாத நாயக்கர்**. இந்தச் சொக்கநாத நாயக்கரின் தேவியார் **மங்கம்மாள்**. நமது நாட்டில் இவரது பெயர் பிரஸித்தமானது.

மங்கம்மாளுடைய கணவனும் மகனும் இறந்து போயினர். அப்போது அரசாட்சிக்குரிய இவளது பேரப்பிள்ளை மிகவும் சிறியவனாய் இருந்தான். ஆகையால் அவனுக்கு வயது வரும் வரையிலும் மங்கம்மாளே அரசு செய்து வந்தாள்.

இந்த இராணியினது அரசாட்சி மிகவும் சிறந்தது. ஆதலால்தான் "மங்கம்மாள் இராச்சியம்போல் கிடையாது" என்று இன்னும் வழங்குகின்றது

இவளது சகோதரன் ஒருவன் புதுக்கோட்டையில் சிற்றரசனாக இருந்தான். அவன் கொடியவன். அவன் ஒரு சமயத்தில் ஒரு குற்றம் செய்துவிட்டான். அதனை அறிந்த மங்கம்மாள் அவனை அழைத்து விசாரித்துத் தன் தம்பி யென்றும் பாராமல் அவனைச் சிறைச்சாலைக்கு அனுப்பினாள். இவளது அரசாட்சி நீதியானதல்லவா?

ஜனங்களுக்கு உதவியாக நல்ல சாலைகளை ஏற்படுத்தினாள். சாலையில் நிழல் தரும்படி இருபுறத்திலும் மரங்களை வைத்தாள். கிராமங்களில் கிணறுகளை வெட்டுவித்தாள். கோயில்களுக்குப் பல திருப்பணி செய்தாள். திருச்சினப்பள்ளியில் இவள் அரசு செய்த மண்டபம் 'டவுன் ஹால்' என்று இப்பொழுது சொல்லப்படுகிறது. பலவிடங்களில் அன்ன சத்திரங்களைக் கட்டுவித்தாள். தமது குடிகளுக்குப் பலவிதமான நன்மைகளைச் செய்தாள். இவளது குணம் மிகவும் பாராட்டத்தக்கது. தனது பேரனுக்குத் தக்க வயது வந்ததும் அரசாட்சியை அவனிடம் ஒப்பித்து விட்டு அரண்மனையிலேயே வசித்து வந்தாள்.

# 23. கடிதம்

பெரியகடை வீதி, சேலம்
பவஹ ஆடிமீ 16வ

தேவரீர் ஐயா அவர்களுக்குத் தங்கள் அன்புள்ள முத்து வணக்கஞ் செய்து எழுதிய கடிதம்.

இங்கு யாவரும் சுகமே. அவ்விடத்தில் தங்கள் நலத்தை அறிய அதிக ஆசையுடையவனு யிருக்கிறேன்.

நான் சென்ற வருஷத்தில் செவ்வையாகப் படித்தத னுலும் தங்கள் நல்ல முயற்சியாலும் இப்பொழுது மேல் வகுப்புக்கு மாற்றப்பட்டு மூன்றும் வகுப்பில் வாசிக்கின் றேன். உபாத்தியாயர் புதுப் புத்தகம் வாங்க வேண்டு மென்று சொன்னுர். ஆதலால், தாங்கள் அன்பு செய்து எனக்கு வேண்டிய புத்தகங்களை வாங்கி யனுப்பும்படி மிகுந்த தாழ்மையுடன் வணக்கமாகக் கேட்டுக்கொள்கின் றேன். தாங்களும் இங்கு ஒரு முறை வந்து போகும்படி யாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

எனது வணக்கத்தை அங்குள்ள யாவருக்கும் தயவு செய்து சொல்லவும் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள குமாரன்,
முத்து.

**விலாசம் :—**

திருவாளர்,
சுந்தர முதலியார் அவர்கள்,
இராஜ வீதி, புதுக்கோட்டை.

# 24. சுகாதார வாக்கியங்கள்

வைகறைத் துயில் எழு
கை கால் கழுவு
பல் விளக்கி உண்
பசித்தபின் புசி
மீதூண் விரும்பேல்
சுத்த நீர் பருகு
நீரைக் காய்ச்சிப் பருகு
மோரைப் பெருக்கி உண்
காற்றுள்ள இடத்திரு
மேட்டிடத்தில் வீடெடு
நோய்க்கு இடம் கொடேல்
அசுத்தம் அகற்று
கந்தையானலும் கசக்கிக் கட்டு
கூழானலும் குளித்துக் குடி
மாலையில் விளையாடு
சேமம் புகினும் சாமத்துறங்கு
சுத்தம் சுகம் தரும்.

## 25. உலோகங்கள்

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் ஆகிய இவைகள் உலோகங்கள் எனப்படும். இந்த உலோகங்கள் மண்ணுடன் கலந்திருக்கும்; சில, மலைச் சுரங்கங்களில் கட்டிகளாகவும் இருக்கும். சில உலோகங்கள் ஆறுகளில் உள்ள மணல்களோடு கலந்திருக்கும். இவற்றை எடுத்துச் சுத்தப்படுத்துவார்கள்.

பொன் மஞ்சள் நிறமான ஓர் உலோகம். இது கட்டிகளாகவும், மணல்களோடு கலந்து பொடியாகவும், பிற உலோகங்களோடு கலந்தும் காணப்படும். இதை உடைத்துத் தண்ணீரில் கலந்தால் பொன் தூள் அடியில் நின்றுவிடும். பின் அதைச் சுத்தி செய்து உருக்கிக் கட்டிகளாகச் செய்வார்கள்.

பொன் உறுதியும், கனமும், பிரகாசமும் உள்ளது. இதில் களிம்பு ஏறாது. இது மிகவும் அருமையாய்க் கிடைக்கும். ஆதலால் இதன் விலை அதிகம். இதுவே உலோகங்கள் யாவற்றிலும் சிறந்தது. பொன்னினால் காப்பு, சங்கிலி, கொலுசு, மோதிரம் முதலிய பலவிதமான நகைகள் செய்யலாம். சாவரன் முதலிய நாணயங்களும் இதனால் செய்யப்படும்.

உலோகங்களில் பொன்னுக்கு அடுத்தது வெள்ளி. இது வெண்மை நிறமானது. பிர

காசமுடையது. இதிலும் களிம்பு பற்ருது. பொன்னைப் போலவே இதையும் சுத்தி செய்து கட்டியாய்க் காய்ச்சி விற்பார்கள். இந்த வெள்ளியினுல் சாதாரண ஏழை ஜனங்கள் காப்பு சங்கிலி முதலிய நகைகளைச் செய்து அணிந்துகொள்வார்கள்.

பெண்கள் காலில் அணிந்துகொள்ளும் பலவகைக் காப்புகளும் கொலுசுகளும் இதனுல் செய்யப்படும். இன்னும் பலவகைப் பாத்திரங் கள், கிண்ணங்கள், தட்டுகள், குடங்கள், விளக் குகள் முதலியவைகளும் செய்யப்படும். ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய், அரைக்கால் ரூபாய் முதலிய நாணயங்களும் செய்யப்படும்.

செம்பு சிவந்த நிறமுடைய உலோகம். செம்பால் பாத்திரங்கள், கம்பிகள் முதலிய சாமான்கள் செய்யப்படும். செப்புப் பாத்திரங் களில் களிம்பு ஏறும். இப் பாத்திரங்களில் புளிப்பான பதார்த்தங்கள் வைக்கக்கூடாது. வைத்தால் பதார்த்தங்கள் கெட்டுப்போகும். அதனுல் செப்புப் பாத்திரங்களுக்கு ஈயம் பூசு வார்கள். ஈயம் பூசப்பட்ட பாத்திரங்களில் களிம்பு ஏருது.

இரும்பு கருமை நிறமானது. இரும்பு மிகவும் உறுதியான உலோகம். இது அதிக மாக அகப்படும். இரும்பு நமக்கு மிகவும் உபயோகமானது.

இரும்பைக் காய்ச்சி அடித்துப் பல சாமான்கள் செய்வார்கள். அவை, மண் வெட்டி, அரிவாள், ஆணி, கோடாரி, கடப் பாரை முதலியனவாம். இன்னும் இயந்திரங் களும் கருவிகளும் செய்யப்படும்.

ஈயம் ஒரு வகை உலோகம். இதில் வெண்மை நிறமுமுண்டு. வெள்ளை நிறமுடை யதற்கு வெள்ளீயம் என்று பெயர். கறுப்பு நிறமு முண்டு. அதற்குக் காரீயம் என்று பெயர். வெள்ளீயத்தைத் தகரம் என்றும் சொல்வார்கள். செம்பு பித்தளைப் பாத்திரங் களுக்குக் களிம்பு ஏறுமல் ஈயம் பூசுவார்கள். ஈயம் பூசப்பட்ட இரும்புத் தகட்டுக்குத் தகர மென்று பெயர்.

## 26. மரம்

பிள்ளைகளே! நீங்கள் பல பிராணிகளைப் பார்த்திருக்கலாம். அவைகளில் சில பறக் கின்றன; சில நடமாடுகின்றன; சில நீரில் வசிக்கின்றன; சில பிராணிகள் ஊர்ந்து செல்லுகின்றன.

ஆனல் சில முளைத்த இடத்திலேயே நிற் கும். அவைகள் புல், செடி, கொடி, மரங்க ளாகும். இவைகளுக்குத் தாவரம் என்று பெயர்.

தாவரங்களில் மிகப் பெரியது மரம். நமக்குக் கைகள் இருப்பதுபோலவே அவைகளுக்குக் கிளைகள் உண்டு. நாம் கைகளால் உணவை உண்பதுபோல் அவைகள் கிளைகளாலும் இலைகளாலும் உணவை உட்கொள்ளும்.

நமக்குக் கால்கள் இருப்பதுபோல மரங்களுக்கும் கால்கள் உண்டு. நமக்குக் கால்கள் இரண்டு. அவைகளுக்குக் கால்கள் கணக்கற்றன. பிள்ளைகளே! அவைகளின் கால்களை நீங்கள் அறிவீர்களா?

வேர்களே மரங்களின் கால்களாகும். இந்த வேர்கள் பூமிக்குட் சென்று மரத்தை நிலைக்கச் செய்யும். இந்த வேர்கள் பூமிக்குள் பல பாகங்களிலும் ஆழமாகச் சென்றிருக்கும். இந்த வேர்களில் துவாரங்கள் உண்டு. இந்த வேர்கள் துவாரத்தின் வழியாகப் பூமியிலுள்ள சாரத்தை இழுத்து மரத்தைப் போஷிக்கும்.

அடிமரம் பருத்துக் கனத்து உறுதியாய் இருக்கும். இதற்குப் போர்வையாய் இருப்பது பட்டை. இது மரத்தைப் பாதுகாக்கும். அடிமரத்திலிருந்து கைகளைப்போல் மேலே சென்றிருக்கும் உறுப்புக்குக் கிளைகள் என்று பெயர். கிளைகளில் பல மிலாறுகள் உண்டு. இந்த மிலாறுகளில் அளவற்ற இலைகள் தோன்

றும். இந்த இலைகள் சில காலத்தில் உதிர்ந்து விடும். பிறகு முளைக்கும்.

மரங்களில் பலவகை யுண்டு. மா, பலா, வாழை, கொய்யா, சீத்தா, நாவல் முதலிய மரங்கள் பழந்தரும். பன்னீர், சண்பகம், பாரிஜாதம் முதலிய மரங்கள் பூக்கும். இந்த மரங்களுக்குக் கிளைகள் உண்டு.

சில மரங்களுக்குக் கிளைகள் இல்லை. அவைகள் பாக்கு, தென்னை, பனை முதலியன.

ஓங்கி வளர்ந்த பெரிய மரங்கள் அடர்ந்த சோலைகளில் மழை அதிகமாகப் பெய்யும். பெரிய மரங்கள் கட்டடம் கட்டுவதற்கு உப யோகமாகும். கிளைகள் விறகாகும். இலைகள் வயலுக்கு உணவாகும். பழங்கள் இனிய உண வாகும். மரங்கள் ஊருக்கு அழகாகும்.

## 27. தந்திரமுள்ள ஆமை

ஒரு கிராமத்தில் ஒரு குளம் இருந்தது. அதில் ஒரு ஆமை வசித்து வந்தது. நெடு நாளாக மழை பெய்யவில்லை. ஆதலால் அக் குளத்தின் நீர் வற்றிப்போயிற்று. ஆமை, நீர் வாழும் பிராணி. ஆகையால் அது அவ்விடத் தைவிட்டு மற்றொரு குளத்துக்குச் சென்றது.

செல்லும் வழியில் ஆமை களைத்துப் போய் ஒரு மரநிழலில் தங்கியது. ஆமை மனக் கவலையுடன் மேலே பார்த்தது. மரக்கிளையில் இரண்டு புறாக்கள் இருக்கக் கண்டது.

ஆமை அப்புறாக்களைப் பார்த்து, "ஏ புறாக்களே! வெயில் அதிகக் கொடுமையா யிருக்கிறது. என்னால் பொறுக்க முடியவில்லை. நீங்கள் என்னை எடுத்துச் சென்று நீர் நிறைந்த குளத்தில் விடுங்கள்; உங்களுக்கு அதிகப் புண்ணியம் உண்டு" என்றது.

அதைக் கேட்ட புறாக்கள் அந்த ஆமையின்மீது இரக்கங் கொண்டன. ஒரு குச்சியை எடுத்து ஆமையிடம் எறிந்து அதைப் பிடித்துக்கொள்ளச் சொல்லின.

அந்த ஆமையும் அந்தக் கோலின் நடுவில் பிடித்துக்கொண்டது. புறாக்கள் அக் கோலின் இரு முனைகளையும் பற்றிக்கொண்டு பறந்து சென்றன.

இதை ஒரு நரி கண்டது. அது அந்த ஆமையைப் பற்றித் தின்ன எண்ணியது. அதற்காக அந்த நரி ஒரு தந்திரம் செய்தது.

தந்திரமுள்ள அந்த நரி அப் புறாக்களைப் பார்த்து, "ஏ மைத்துனர்களே! உங்களோடு இருக்கும் எனது மனைவியை என்னிடம் விட்டு விடுங்கள்" என்றது. இவ் வார்த்தைகளைக்

கேட்ட அப்புருக்கள் இரண்டும் சிரித்தன. சிரித்தவுடனே, கோலின் இடையில் பிடித்திருந்த ஆமையும் பிடியை விட்டுப் பொத்தென்று கீழே விழுந்தது

அதைக் கண்ட நரி தனது தந்திரம் கைகூடியதென்று மகிழ்ச்சி யுற்றது. விரைவாக ஓடிச் சென்று ஆமையைக் காலாற் பற்றிக் கொண்டது.

நரி ஆமையைக் கடிக்கத் தொடங்கலும் அதன் முதுகெலும்பு கடினமா யிருந்ததால் கடிக்க முடியவில்லை. ஆதலால் நரி ஆமையை விட்டுவிட்டது.

பின்பு நரி ஆமையைப் பார்த்து, "ஆமையே! உன்னை எப்படித் தின்ருல் மெதுவாக இருக்கும்" என்றது. உடனே, ஆமை தப்பித்தோம் என்று எண்ணிக்கொண்டு, நரியைப் பார்த்து, "மாமா, நீரில்லாததால் நான் உலர்ந்துவிட்டேன். என்னை எடுத்துக்கொண்டு போய் நீருள்ள குளத்தில் விட்டுவிடு, நான் நீரில் நனைந்து மெதுவாக இருப்பேன்" என்றது.

அதைக் கேட்ட நரி, உண்மை என்று நம்பி ஆமையை எடுத்துக்கொண்டுபோய் ஒரு குளத்தில் விட்டது. ஆமையும் அதுவே சமயம் என்று எண்ணித் தண்ணீருக்குள் விரைந்து ஓடிப்போயிற்று.

# 28. ஔவை அருந்தமிழ்

## கல்வி

எண்ணெழுத்து இகழேல்.
ஓதுவது ஒழியேல்.
பருவத்தே பயிர் செய்.
கேள்வி முயல்.

## பெருமை

உத்தமனாய் இரு.
ஊக்கமது கைவிடேல்.
காப்பது விரதம்.
சக்கர நெறி நில்.

## சேர்ந்து வாழ்தல்

ஊருடன் கூடி வாழ்.
சான்றோர் இனத்திரு.
சேரிடம் அறிந்து சேர்.
தேசத்தோடு ஒத்து வாழ்.



## 29. ஒற்றுமை

ஒரு கிராமத்தில் ஒரு செல்வன் இருந்தான். அவனுக்கு நான்கு குமாரர்கள் இருந்தார்கள். அவர்கள் கல்வியறிவு இல்லாதவர்கள். ஆதலால் அவர்கள் எப்பொழுதும் ஒருவர்க்கொருவர் சண்டை யிட்டுக்கொண்டே இருந்தார்கள்.

அதைக் கண்ட அவர்களுடைய தகப்பன் அவர்களுக்குப் பலதாமும் புத்தி புகட்டினன். அவர்கள் கேட்கவில்லை. அவன் தன்னல் கூடிய வரையிலும் முயன்று பார்த்தான். எல்-

லாம் வீணாயின. அவர்கள் முன்னிலும் அதிகமாகச் சண்டை யிடுவாராயினர்.

அவன் நெடுநாளாக யோசித்துப் பார்த்தான். ஒன்றும் வழி தெரிய வில்லை. கடைசியாக ஓர் உபாயம் செய்தான்.

ஒருநாள் அவன் தனது பிள்ளைகள் நால்வரையும் தன்னிடம் அழைத்தான். அவர்களும் வந்து சேர்ந்தார்கள். பிற்பாடு ஒரு விறகுக் கட்டை வாங்கி வரும்படி செய்தான்.

அவன் தன் குமாரர்களைப் பார்த்து, "பிள்ளைகளே! நீங்கள் ஒவ்வொருவராக உங்களுடைய முழு பலத்தோடும் இந்த விறகுக் கட்டை முறியுங்கள்" என்றான். அவர்கள் ஒவ்வொருவராக அவ் விறகுக் கட்டை முறிக்கப் பார்த்தனர். ஒருவராலும் அவ் விறகுக் கட்டை முறிக்க முடியவில்லை. விறகுக் கட்டு முறிபடாமல் இருந்தது.

பிறகு தகப்பன் அப் பிள்ளைகளைப் பார்த்து அக் கட்டை அவிழ்க்கச் சொன்னான். அவர்கள் அந்த விறகுக்கட்டை அவிழ்த்தனர். பின் தகப்பன் ஒவ்வொரு விறகுச் குச்சியை எடுத்து ஒவ்வொரு பிள்ளையிடமும் கொடுத்து அதை முறிக்கச் சொன்னான்.

பிள்ளைகள் யாவரும் அவ் விறகுச் குச்சியை வெகு எளிதாக ஒடித்தார்கள். அதைக் கண்ட பிதா தனது பிள்ளைகளைப் பார்த்து, "பிள்ளைகளே! விறகுக் குச்சிகள் தனித் தனியாய் இருந்தபொழுது நீங்கள் மிக எளிதில் ஒடித்து விட்டீர்கள். அந்த விறகுச் குச்சிகள் ஒன்ருகக் கட்டப்பட் டிருந்தபோது உங்களால் ஒடிக்க முடியவில்லை. இதனை நீங்கள் எல்லோரும் கண்டீர்கள். ஆதலால் இனிமேல் நீங்கள் ஒருவர்க் கொருவர் சண்டை யிட்டுக் கொள்ளாமல் இருக்கவேண்டும். நீங்கள் யாவரும் ஒற்றுமையாய் ஒன்றுகூடி வாழ வேண்டும். ஒன்றுகூடி யிருப்பதுபோல வேறு பலமில்லை. நீங்கள் ஒன்றுகூடி ஒற்றுமையாய் வாழ்ந்தால் உங்களை வெல்ல ஒருவராலும் ஆகாது. அப்படியின்றி நீங்கள் தனித் தனியாக இருந்தால் விறகுக் குச்சியைப்போல உங்களை எளிதாக வென்றுவிடுவார்கள். ஆதலால் நீங்கள் இந்தப் புத்திமதியைச் செவ்வையாக மனதில் வைத்து ஒன்றுகூடி வாழ்ந்திருங்கள்" என்று புத்தி புகட்டினன்.

பிள்ளைகளே! நீங்களும் இந்தப் பாடத்தைப் படித்து ஒன்றுகூடி வாழ்வீர்களாக.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

என்பது ஒரு பழமொழி.



## 30. இரண்டு வழிப்போக்கர்களும் கரடியும்

ஒரு காலத்தில் இரண்டு மனிதர்கள் நெடுந் தூரத்திலுள்ள ஓருருக்குப் பிரயாணம் செய்தார்கள். செல்லும் வழியில் அடர்ந்த காடொன்று குறுக்கிட்டது.

அக்காடு, கொடிய மிருகங்கள் நிறைந்த காடு என்று முன்னமே அவர்கள் அறிவார்கள். ஆதலால் தாங்கள் செல்லும் வழியில் மிருகங்களின் அடிச்சுவடுகளைக் காணலாமென்றும் எண்ணினுர்கள். இவ்வித எண்ணத்தோடு ஜாக்

கிரதையாகச் சுற்றிலும் பார்த்துக்கொண்டே சென்றார்கள்.

வழியில் தமக்கு ஆபத்து உண்டானால் ஒருவர்க்கொருவர் உதவ வேண்டும் என்று பேசிக்கொண்டே போயினர். அப்பொழுது ஒருவன் மற்றவனைப் பார்த்து, "நீ ஒன்றுக்கும் அஞ்சாதே; எந்தப் பிராணியும் என்முன் நில்லாது. நான் பல மிருகங்களோடும் சண்டை செய்திருக்கிறேன்" என்றான்.


மறுபடியும் தான் மிருகங்களோடு செய்த சண்டைகளில் ஒன்றைப்பற்றிச் சொல்லிக் கொண்டே போனான்.

இடையில் மற்றொருவன் காட்டில் உண்டாகிய பயங்கரமான ஓசையைக்கேட்டு அஞ்சிப் பேரொலி செய்தான். சிறிது நேரத்துக்குள் பெரிய கரடி ஒன்று அவர்களுக்கு எதிரே வந்தது. உடனே கதை சொல்லிக்கொண்டு வந்த மனிதன் பயத்தால் ஒன்றுந் தோன்றாமல் சிறிது நேரம் திகைத்து நின்றான். பின் மனம் தேறி, விரைந்தோடிச் சென்று அருகிலிருந்த மரமொன்றில் தாவி யேறி மரக்கிளையொன்றில் மறைந்துகொண்டான். மற்றவன் கரடியைப் பார்த்தான். தனக்கு உதவி செய்வதாகச் சொன்ன சிநேகிதனைக் காணவில்லை. இன்னது செய்வதென்று அறியாது திகைத்து

நின்றான். சிறிது நேரத்தில் தான் தப்புவதற்கு வழியில்லை என்று தெரிந்து, பூமியில் விழுந்து செத்தவனைப்போல மூச்சை அடக்கிக்கொண்டு வீழ்ந்து கிடந்தான்.

கரடி அவனிடம் வந்து அவனைச் சுற்றிப் பார்த்து அவன் முகத்தை முகர்ந்து பார்த்தது! அப்பொழுது அவன் சிறிதும் அஞ்சாமல் தான் அசையாமல் படுத்திருப்பதே தப்புவதற்குரிய வழி என்று எண்ணியிருந்தான். கரடியும் பலதரமும் அவனைச் சுற்றி வந்து பார்த்தது. அவன் சிறிதும் மூச்சு விடாமல் படுத்துக்கொண் டிருந்ததனால் அவனைப் பிணம் என்றெண்ணிக்கொண்டு கரடி போய்விட்டது. மாத்தின்மேல் இருந்தவன் கரடி போய்விட்டதைக் கண்டதும் விரைவாக மரத்திலிருந்து இறங்கி வந்தான். அவன் மற்றவனைப் பார்த்து, "சிநேகிதா ! உன்னிடம் கரடி என்ன இரகசியம் சொல்லிற்று?" என்றான்.

அதற்கு மற்றவன் "ஆபத்துக் காலத்தில் சிநேகிதனுக்கு உதவி செய்யாமல் ஓடிவிடும் வீரமில்லாதவனுடைய பேச்சில் நம்பிக்கை வைக்கலாகாது என்று சொன்னது" என்றான். அதனைக் கேட்ட அவன் வெட்கமடைந்தான். அதுமுதல் அவ்விருவர்களும் நகமும் சதையும்போலப் பிரியாமல் நேசித்து வந்தார்கள்.



# 31. யானை

உலகத்தில் உள்ள விலங்குகள் எல்லாவற்றிலும் யானை உருவத்தில் பெரியது. யானை உடல் அமைப்பிலும், பலத்திலும் சிறந்தது. அது பன்னிரண்டு அடிக்குமேலும் வளரும்.

யானையின் மத்தகம் மிகவும் பெரியது. அதன் கழுத்து குறுகியிருக்கும். அதனால் அது கழுத்தைத் திருப்ப முடியாது. யானைக்கு அபூர்வமான உறுப்பு ஒன்று உண்டு. அதுதான் தும்பிக்கையாகும். தும்பிக்கை கையைப் போல மிகவும் உபயோகமானது. அவனால் யானை முகரும்; சுவாசிக்கும். அதன் நுனியில் ஒரு சிறிய உறுப்புண்டு.

அதன் உதவியால் யானை சிறிய பொருளையும் பூமியிலிருந்து எடுக்கும்.

அதன் காதுகள் முறம்போலிருக்கும். யானை, காதுகளின் உதவியால் உடலில் உட்காரும் ஈ முதலியவற்றை ஓட்டும். இதற்காகத் தான் யானை அசைந்துகொண்டே யிருக்கும்.

ஆண் யானைக்கு வாயில் இரண்டு கொம்புகள் முளைத்திருக்கும். அதற்குத் தந்தம் என்று பெயர். அது மூன்று நான்கடி நீளம் இருக்கும். யானை தனது கொம்புகளின் உதவியால் மரங்களை வேரோடு பறித்துத் தள்ளும்.

யானையின் கால்கள் பருத்த உடலைத் தாங்குவதற்குத் தக்கதாய் அமைந்திருக்கும். அதன் கால்கள் உரல்போல் கனமுள்ளதா யிருக்கும். அதன் வாலில் சிறிய உரோமங்கள் உண்டு. வாலினால் முதுகில் உட்காரும் ஈக்களை ஓட்டும்.

யானை சாக பக்ஷணி. அது காய், கனி, கிழங்கு, இலை, செடி, கொடி முதலியவற்றைத் தின்னும். வளர்க்கப்படும் யானை அரிசியும் தின்னும். யானை மிகுதியும் தீனி தின்னும். அதனால் "யானையைக் கட்டித் தீனிபோடுவது போல" என்ற பழமொழி வழங்குகிறது.

யானைகள் மலைக் காடுகளில் வசிக்கும். அவைகள் கூட்டம் கூட்டமாய்ப் பிரயாணம்


செய்யும். யானையை எதிர்ப்பவர் தப்புவது அரிது. காடுகளை அழிப்பதில் அதற்குச் சந்தோஷம் அதிகம். யானைகள் நமது சென்னை இராஜதானியின் அருகிலுள்ள மைசூர் காடுகளிலும், திருவாங்கூர் காடுகளிலும் மிகுதியுமுண்டு.

யானைகளைப் பிடிக்க, குழி வெட்டித் தழைகளால் அதை மூடிவைப்பார்கள். கூட்டமாய்ச் செல்லும் யானைகள் அக் குழியில் வீழ்ந்துவிடும். பழகிய யானைகளைக்கொண்டு அவைகளைப் பிடித்துப் பழக்குவார்கள்.

யானையினால் பல நன்மைகள் உண்டு. அரசர்கள் யானைகளை வளர்ப்பார்கள். கோவில்களிலும் யானை வளர்க்கப்படும். நமது நாட்டில் உற்சவகாலங்களில் யானை அலங்காரமாக முன்னே செல்லும். முற்காலத்தில் யானைகள் சண்டையிடும்.

யானைகள் மனிதரால் செய்ய முடியாத வேலைகளைச் செய்யும். காட்டில் வெட்டப்படும் மரங்களை இழுத்துச் செல்லும். வெட்டப்பட்ட மரங்களை அடுக்கிவைக்கும்.

புலி வேட்டைக்கு யானைகள் பழக்கப்படும். அதன் தந்தம் அதிக விலையுள்ளது. தந்தத்தினால் சிலைகள், பல்லக்குகள், சிமிள்கள் முதலிய சிறந்த பொருள்கள் செய்யப்படும்.



## 32. கிராம பரிபாலனம்

ஒரு கிராமத்திற்கு அதிகாரி கிராம முனிசீப் ஆகும். இவருக்குள்ள அதிகாரத்திற்கு அளவில்லை. இவருக்குப் பல பெயர்கள் உண்டு. இந்த ராஜதானியின் வடபாகத்தில் ரெட்டி என்று சொல்லுவார்; தென்பாகத்தில் மணியகாரன் அல்லது முன்சீப் என்று சொல்லுவார்.

ஏறக்குறைய எல்லாக் கிராமங்களிலும் நியாயம் விசாரிப்பதற்கு முன்சீப் என்ற ஒரு

அதிகாரி யுண்டு. தீர்வைப் பணம் வசூலிப்ப தற்கு மற்றொருவனுண்டு. ஆனாலும் நியாயம் தீர்ப்பவனையே ஜனங்கள் ஆதியாகக் கொண் டிருக்கின்றார்கள்.

கிராமத் தலைவர் பெரும்பாலும் மிகுந்த பணக்காரரா யிருப்பார். பெருமையுடையவரா கவும் இருப்பார். இவர் கிராமத்தில் உண்டாகும் வழக்குகளைத் தீர்ப்பார். குற்றம் செய்தவர்க ளுக்குச் சிறு தண்டனை விதிப்பார். குற்றவாளி யைத் தொழுவில் அடைக்கவும், காவற்சாவ டியில் பன்னிரண்டு மணி நேரம் நிறுத்தி வைக்கவும் அவருக்கு அதிகாரமுண்டு. ஆனால் சிறை வைக்கவும் மிகுந்த அபராதம் விதிக்கவும் அவருக்கு அதிகாரமில்லை.

நமது நாட்டில் வாழ்ந்த நமது முன் னோர்கள் முற்காலங்களில் சண்டை யிட்டுக் கொள்ளமாட்டார்கள். சண்டையிட்டுக் கொண் டாலும் தாங்களே தீர்த்துக் கொள்வார்கள். கிராமாதிகாரியும் பட்சபாதமின்றி இருப்பார். அதிகாரி பட்சபாதமாக நடந்தால் கிராமத்தார் கள், மேல் அதிகாரிகளுக்குத் தெரிவிப்பார்கள். ஆதலால் கிராமாதிகாரி ஒழுங்குடையவராக இருப்பார்.

முன்சீப்புக்கு அடுத்த அதிகாரி மணிய காரர். இவர் அரசாங்கத்தார் கட்டளையின்

படி தீர்வை வசூல் செய்வார். சில கிராமங் களில் ஒரே மனிதன் இரண்டு வேலைகளையும் பார்ப்பதுண்டு. நாம் பயிரிடும் நிலத்தை அளப்பார். நிலத்தின் பரப்பையும் பயிரின் வகையையும் கணக்கில் பதிவு செய்வார். தீர் வையைக் குறிப்பார். இறந்தவர்களையும் பிறந் தவர்களையும் குறித்து வைப்பார். முன்சீப்புக்கு உதவியாக இருப்பார்.

தீர்வை வசூல் செய்கையில் இன்னொரு வன் உடன் இருப்பான். அவனுக்குத் தலை யாரி என்று பெயர். இவனுக்குத் தண்டக்கா ரன் என்றும் பெயர். இவன் ஊரைக் காவல் செய்வான். கணக்கப்பிள்ளை நிலத்தை அளக் கும்போது, சங்கிலி பிடித்து உதவி செய்வான். முன்சீப்பு தீர்வை வசூல் செய்யும்போது இவன் கூட இருந்து உதவி செய்வான். வசூ லான பணத்தை கஜானாவுக்குக் கிராம முன் சீப்புடன் கொண்டு செல்வான். சர்க்கார் விளம் பரத்தைத் தெரிவிப்பான். மேலான அதிகாரி களுக்குக் கடிதம் கொண்டுபோவான்.

# 33. நமது இந்தியாவின் சக்கரவர்த்தியாகிய ஐந்தாம் ஜார்ஜ் மகாராஜர்

(கோம்மி)

நீதி மகாராணி விக்டோரி யாவுக்கு
நேரான சம்பத்துப் பேரரடி
கோதில்லா ஏழாம் எட்வர்டு மகாராஜர்
கொண்டாடும் புண்ய குமாரரடி.

மேதினிக் கன்னியா மேரிமா ராணியார்
மெச்சிடு மின்பவி நோதரடி
சாதகப் பிரிட்டிஷ் அரசின் ஐந்தாவது
ஜார்ஜு மகாராஜா நீதரடி.

பகரா யிரத்துத் தொளாயிரத் துப்பதி
னென்றெனு நல்லவரு டந்தனிலே
திகழும் டிசம்பர்மா தம்பனி ரெண்டெனும்
தேதியி லேடில்லி ஜோதியிலே.

நம்மிந்தி யாவுக்குச் சக்கரவர்த் தியென்று
நாட்டிடும் பட்டமே சூட்டிக் கொண்ட
சக்கரவர்த்தி ஆரும் ஜார்ஜு மகாராஜர்
சந்ததம் என்றென்றும் வாழியவே.

— உடுமலை சரபம் - முத்துசாமி கவிராயர்

# 34. செய்யுள் பாடம்

## கொன்றைவேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயந் தொழுவது சாலவும் நன்று
இல்லறம் அல்லது நல்லறம் அன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து
ஐயம் புகினும் செய்வன செய்
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு
கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை

காவல் தானே பாவையர்க்கு அழகு
கிட்டா தாயின் வெட்டென மற
கீழோர் ஆயினுந் தாழ உரை
குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி

சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு
சீரைத் தேடின் ஏரைத் தேடு
சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்
சூதும் வாதும் வேதனை செய்யும்
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை
திரைகடல் ஓடியும் திரவியம் தேடு
தீராக் கோபம் போராய் முடியும்
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்

தையும் மாசியும் வையகத்து உறங்கு
தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
தோழ னோடும் ஏழைமை பேசேல்
நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி

நோன்பு என்பது கொன்று தின்னாமை
பாலோடு ஆயினும் காலம் அறிந்துண்
பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்
பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்
போனகம் என்பது தானுழந்து உண்டல்

மருந்தே ஆயினும் விருந்தோடு உண்
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
மேழிச் செல்வம் கோழை படாது
வளவன் ஆயினும் அளவறிந்து அளித்து உண்
ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு

வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை
ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்

Printed at the 'Caxton Press', Madras — 1938. (C)

## ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

### வெளியிட்ட புத்தகங்கள்

---

#### நூதன முறைக் கணிதம்

| | | | |
|---|---|---|---|
| முதல் வகுப்பு | அச்சில் | | |
| இரண்டாம் வகுப்பு | ,, | | |
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 |
| நான்காம் வகுப்பு | 0 | 6 | 0 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 8 | 0 |

#### கணித புஸ்தகம்

| | | | |
|---|---|---|---|
| முதல் இரண்டாம் வகுப்புகள் | 0 | 4 | 0 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 |
| நான்காம் வகுப்பு | 0 | 6 | 0 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 8 | 0 |

#### ஸ்வதேச பூகோளங்கள்

| | | | |
|---|---|---|---|
| தஞ்சாவூர் ஜில்லா | 0 | 6 | 0 |
| சேலம் ஜில்லா | 0 | 6 | 0 |
| தென் ஆற்காடு ஜில்லா | 0 | 6 | 0 |
| கோயமுத்தூர் ஜில்லா | 0 | 6 | 0 |

#### இயற்கை உலகம்

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் | 0 | 2 | 0 |
| இரண்டாம் புத்தகம் | 0 | 5 | 0 |
| மூன்றாம் புத்தகம் | 0 | 6 | 0 |

---